2. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் பிரிவிலேஜ் நான் கொடுத்திருக்கிறேன். அது என்ன என்று சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் மட்டுமல்ல, நிறைய உறுப்பினர்கள் பிரிவிலேஜ் மேட்டர் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை இனிமேல்தான் நான் பரிசீலிக்க வேண்டும். அவற்றை எடுத்துக் கொள்ளும்போது, உங்களுடைய பிரச்சினையும் எடுத்துக் கொள்ளப்படும்.

(ஆ) கோட்டைப் பகுதியில் காவல் கண்காணிப்பு.

திரு. ரா. கிருஷ்ணன் : பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, விடுதியிலிருந்து இன்றைக்கு சட்ட சபைக்கு வரும்போது எங்களோடு சில பார்வையாளர்களும் வந்தார்கள். அவர்களை கோட்டைப் பகுதிக்குள் எங்கேயும் இருக்க விடாமல் தடுத்து வெளியே அனுப்பியிருக்கிறார்கள் போல் இருக்கிறது. அவர்களுக்கு பாஸ் வாங்கிக் கொண்டு வந்து பார்த்தால் எங்கே தேடினாலும் அவர்கள் இல்லை. இது ஏதோ புது ஏற்பாடு, விசேஷ ஏற்பாடு போல தோன்றுகிறது. எங்கு பார்த்தாலும் போலீஸ் தலைகள். இது என்ன புதிதாக இருக்கிறதே என்று உங்களைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சபாநாயகர் அவர்களே, தாங்கள் பாராளுமன்றத்திலே பல ஆண்டுக்காலம் உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். அங்கேயுள்ள நடைமுறை, நடவடிக்கைகள் எல்லாம் உங்களுக்கும் தெரியும் எங்களுக்கும் தெரியும். ஆனால் இங்கே போலீசை வைத்துக் கொண்டு சட்டமன்றம் நடக்கிறது. முதல்நாள் சட்டசபை கூட்டத்திற்காக ஆட்டோ ரிக்ஷா வைத்துக் கொண்டு நான் வந்தபோது, சப்-இன்ஸ்பெக்டர் என்னை கேட்டிலேயே நிறுத்தி இறக்கிவிட்டார். நான் எம்.எல்.ஏ. என்று சொல்கிறேன். அப்போது கூட ஆட்டோவை அனுமதிக்காமல் அங்கேயே நிறுத்தி விட்டார். நான் ஆட்டோவிலே வரக் கூடாதா? சட்டமன்றத்தை வேறு இடத்திலே வேண்டுமானால் வைத்து நடத்துங்கள்; நாங்கள் வருகிறோம். இங்கே ஆட்டோ, டாக்சி வரக் கூடாது என்று சொன்னால் எப்படி? போலீசாருடைய கெடுபிடி தாங்க முடியாமல் இருக்கிறது.